பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
20 09 2024 7 15
வெள்ளிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மாணவிகள் உயர்கல்வி கற்பதை கல்வி நிறுவனங்களும், ஆசிரியர்களும் ஊக்கவிக்க வேண்டும் என்று குடியரசுத்தலைவர் திருமதி திரெளபதி முர்மு கேட்டுக்கொண்டுள்ளார்.

2. மத்திய - மாநில அரசுகளின் ஒருங்கிணைந்த சரக்கு மற்றும் சேவை வரி குழுக் கூட்டம் இன்று நடைபெறுகிறது.

3. மேற்குவங்கத்தில் பயிற்சி மருத்துவர்கள் மேற்கொண்டு வந்த வேலைநிறுத்தப் போராட்டத்தை திரும்பப் பெற்றுள்ளனர்.

4. உலகில் தொழுநோயை முற்றிலும் ஒழித்த முதல் நாடாக ஜோர்டான் திகழ்கிறது என்று உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது.

5. இந்திய ஜூனியர் ஆடவர் தேசிய ஹாக்கி சாம்பியன்ஷிப் போட்டியில் பஞ்சாப் அணி, கோப்பையை வென்றது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<<>>>>

மாணவிகள் உயர்கல்வி கற்பதை கல்வி நிறுவனங்களும், ஆசிரியர்களும் ஊக்கவிக்க வேண்டும் என்று குடியரசுத்தலைவர் திருமதி திரெளபதி முர்மு கேட்டுக்கொண்டுள்ளார்.

இந்தூரில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், பெற்றோர் மற்றும் ஆசிரியர்களின் உதவியுடன் மாணவிகள் தங்கள் கனவை நனவாக்க முடியும் என்று கூறினார்.

மாணவிகள் தங்களுடைய திறமைகள், ஆர்வம் ஆகியவற்றின் அடிப்படையில் எதிர்கால வேலைவாய்ப்புகளை தேர்ந்தெடுக்க வேண்டும் என்று அவர் அறிவுறுத்தினார்.

இதன்மூலம் வெற்றி உறுதி செய்யப்படும் என்றும் குடியரசுத்தலைவர் கூறினார்.

<<<<>>>>

ஊடகங்கள் தனிநபர் அணுகுமுறையில் இருந்து விலகி அமைப்புகள் மற்றும் நாட்டின் வளர்ச்சி அம்சங்களில் கவனம் செலுத்த வேண்டும் என்று குடியரசு துணைத்தலைவர் திரு. ஜக்தீப் தங்கர் கேட்டுக்கொண்டுள்ளார்.

புதுதில்லியில் நாடாளுமன்ற வளாகத்தில் நடைபெற்ற சன்சத் தொலைக்காட்சியின் மூன்றாம் ஆண்டு தொடக்க நிகழ்ச்சியில் அவர் பங்கேற்றுப் பேசினார்.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் நடைபெறும் வளர்ச்சிப் பணிகள் குறித்து ஊடகங்கள் செய்தி வெளியிட வேண்டும் என்று திரு. ஜக்தீப் தங்கர் கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

மேற்குவங்கத்தில் பயிற்சி மருத்துவர்கள் மேற்கொண்டு வந்த வேலைநிறுத்தப் போராட்டத்தை திரும்பப் பெற்றுள்ளனர்.

இன்று முதல் தாங்கள் பணிக்குத் திரும்புவதாக அவர்கள் அறிவித்துள்ளனர்.

எனினும் பெண் பயிற்சி மருத்துவர் கொலையில் ஈடுபட்டவர்களுக்கு தண்டனை கிடைக்கும் வரையிலும், அச்சுறுத்தல் மற்றும் சுகாதார துறையில் ஊழல் ஆகியவற்றுக்கு எதிராக மாநில அரசு நடவடிக்கை எடுக்கும் வரையிலும் தங்களது போராட்டம் தொடரும் என்று அவர்கள் கூறியுள்ளனர்.

நீதிக்காக நீதிமன்றத்தில் தொடர்ந்து போராடுவோம் என்றும் மேற்குவங்க பயிற்சி மருத்துவர்கள் தெரிவித்தனர்.

<<<<>>>>

உலகில் தொழுநோயை முற்றிலும் ஒழித்த முதல் நாடாக ஜோர்டான் திகழ்கிறது என்று உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக உலக சுகாதார நிறுவன தலைமை இயக்குநர் டாக்டர் டெட்ரோஸ் அதானோம், ஜோர்டான் அரசுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

தனிநபர், குடும்பத்தினர் மற்றும் சமூகத்தில் தொழுநோய் வராமல் இருக்கும் வகையில் ஜோர்டானில் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதாக கூறியுள்ளார்.

கடந்த 20 வருடங்களாக ஜோர்டானில் எந்தவொரு நபரும் தொழுநோயால் பாதிக்கப்படவில்லை என்று அவர் தெரிவித்தார்.

அங்கு நிலவும் சூழ்நிலை குறித்து ஆய்வு செய்ததற்குப் பிறகு இது தெரியவந்ததாக டாக்டர் டெட்ரோஸ் அதானோம் கூறினார்.

தொழுநோயால் 120க்கும் மேற்பட்ட நாடுகளில் உள்ளவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆண்டுதோறும் 2 லட்சத்திற்கும் மேற்பட்டவர்களுக்கு இந்நோய் பாதிப்பு ஏற்படுவதாகவும் உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

நாடு முழுவதும் தொழில்நுட்ப பராமரிப்பு பணி காரணமாக இன்று இரவு 8 மணி முதல் வரும் 23ஆம் தேதி காலை 6 மணி வரை பாஸ்போர்ட் சேவை இணையதளம் செயல்படாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே பாஸ்போர்ட் விண்ணப்பத்தை ஆன்லைனில் பதிவு செய்வதற்கும், மற்ற விசாரணைகளுக்கும் தொழில்நுட்ப பராமரிப்பு பணி நிறைவுற்ற பிறகு பாஸ்போர்ட் சேவை இணையதளத்தைப் பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

<<<<>>>>

நதிநீர் இணைப்புத் திட்டம் விரைவில் தொடங்கப்படும் என்று மத்திய நீர்வளத்துறை அமைச்சர் திரு. சி.ஆர். பாட்டீல் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற இந்திய தண்ணீர் வாரத்தின் நிறைவுநாள் நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர், இத்திட்டத்தின் மூலம் நாட்டில் உள்ள பல்வேறு ஆறுகளின் நீராதாரத்தை நிர்வகிக்க முடியும் என்று கூறினார்.

இந்திய தண்ணீர் வார நிகழ்ச்சியின் மூலம் பல்வேறு புதிய கருத்துகள் பெறப்பட்டதாகவும், அவற்றை அரசு செயல்படுத்தும் என்றும் அவர் தெரிவித்தார்.

நீர்ப் பாதுகாப்பு குறித்து அறிந்துகொள்ள உலக நாடுகளின் பிரதிநிதிகளை ஒருங்கிணைத்த தளமாக இந்நிகழ்ச்சி நடைபெற்றதாக திரு. சி.ஆர். பாட்டீல் குறிப்பிட்டார்.

<<<<>>>>

இந்தியாவை 2047ஆம் ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த நாடாக மாற்றுவதற்கு வங்கித்துறை முக்கியப் பங்காற்ற வேண்டும் என்று மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

புனேயில் நடைபெற்ற மஹாராஷ்டிரா வங்கியின் 90வது நிறுவன தின விழாவில் பங்கேற்று அவர் பேசினார்.

சிறு குறு மற்றும் நடுத்தர தொழில்துறையினருக்கு ஆதரவு அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து அவர் வலியுறுத்தினார்.

வங்கி சேவைகளுக்கான அணுகுமுறையை விரிவுபடுத்துதல், உள்கட்டமைப்பு நிதி, அனைத்து குடிமக்களுக்கும் விரிவான காப்பீட்டுத் திட்டத்தை உறுதி செய்தல் ஆகியவை குறித்தும் அவர் விளக்கினார்.

அரசு காப்பீட்டுத் திட்டங்களை மிக ஏழ்மையான மக்களுக்கு அளிப்பதில் பொதுத்துறை வங்கிகள் முக்கியப் பங்காற்றுவதாகவும் திருமதி நிர்மலா சீதாராமன் கூறினார்.

<<<<>>>>

விஷ்வ கர்மா திட்டத்தின் ஓராண்டு முன்னேற்றம் குறித்த நிகழ்ச்சியில் பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று பங்கேற்கிறார்.

மஹாராஷ்டிர மாநிலம் வார்தாவில் நடைபெற உள்ள நிகழ்ச்சியில் விஷ்வ கர்மா பயனாளிகளுக்கு சான்றிதழ்களையும், கடன்களையும் அவர் வழங்க உள்ளார்.

விஷ்வகர்மா திட்டத்தின்கீழ் உள்ள தொழிற்பிரிவைச் சேர்ந்த 18 பயனாளிகளுக்கு நிதி உதவியை அவர் வழங்க உள்ளார்.

இத்திட்டத்தின் ஓராண்டு முன்னேற்றத்தைக் குறிக்கும் வகையில் நினைவு தபால் தலையையும் பிரதமர் வெளியிட உள்ளார்.

<<<<>>>>

பாதுகாப்புத்துறையில் பணியாற்றி ஓய்வு பெற்றவர்கள், குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்கள், பாதுகாப்பு அமைச்சகத்தின் **Sparsh** என்ற இணையதளத்தில் தங்களை பதிவு செய்து கொள்ள வேண்டும் என்று பாதுகாப்பு அமைச்சகத்தின் தென்மண்டல கணக்கு தணிக்கை அதிகாரி திரு. **T. Jayaseelan** கூறியுள்ளார்.

இதுதொடர்பாக, எமது செய்தி ஆசிரியர் ஜாய் அவருடன் நடத்திய நேர்காணல் நிகழ்ச்சி, இன்று காலை மணி 10.02 முதல் 10.32 வரை சென்னை ஆகாஷவாணியின் பிரதான அலைவரிசை மற்றும் பண்பலை 101.4 அலைவரிசையில் ஒலிபரப்பாக உள்ளது.

<<<<>>>>

மேற்குவங்க மாநிலத்தில் தென் மாவட்டங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதையடுத்து, ஜார்கண்ட் எல்லையை 3 நாட்களுக்கு மூடுமாறு அம்மாநில முதலமைச்சர் செல்வி மம்தா பானர்ஜி உத்தரவிட்டுள்ளார்.

இதையடுத்து எல்லைச்சாவடிகள் மூடப்பட்டு இரு மார்கங்களிலும் சரக்கு மற்றும் பயணிகள் போக்குவரத்திற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் ஜார்கண்டில் பெய்த கனமழை காரணமாக அங்கிருந்து மேற்குவங்க மாநிலத்தின் பல்வேறு மாவட்டங்களில் வெள்ளம் புகுந்ததையடுத்து, இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

<<<<>>>>

மத்திய - மாநில அரசுகளின் ஒருங்கிணைந்த சரக்கு மற்றும் சேவை வரி குழுக் கூட்டம் இன்று புதுதில்லியில் நடைபெறுகிறது.

இந்தக் கூட்டத்தில் ஜி.எஸ்டி வரி விதிப்பில் உள்ள சில பிரச்சினைகள் குறித்து விவாதிக்கப்பட உள்ளன.

சில பொருட்களுக்கு ஜி.எஸ்.டி. வரியை நிர்ணயம் செய்வதில் உள்ள ஏற்றத்தாழ்வுகளை சரிசெய்யும் விதத்தில் இந்தக் கூட்டத்தில் விவாதங்கள் மேற்கொள்ளப்படும் என்று நிதியமைச்சகம் தெரிவித்துள்ளது.

ஜி.எஸ்டி மூலம் மத்திய மாநில வரி பகிர்வில் உள்ள ஏற்றத்தாழ்வுகளை சரிசெய்வது குறித்தும் இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்படும் என்று நிதியமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

இந்திய ஜூனியர் ஆடவர் தேசிய ஹாக்கி சாம்பியன்ஷிப் போட்டியில் பஞ்சாப் அணி, கோப்பையை வென்றது.

ஜலந்தரில் நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் அந்த அணி, 4-3 என்ற கோல் கணக்கில் உத்தரப்பிரதேச அணியை வென்றது.

<<<<>>>>

உலக ஜூனியர் பளுதூக்குதல் சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியாவின் தனுஷ் லோகநாதன் வெண்கலப் பதக்கம் வென்றார்.

ஸ்பெயின் நாட்டின் லியோன் நகரில் நடைபெற்ற இப்போட்டியின் ஆடவர் 55 கிலோ எடைப்பிரிவில் அவர் இப்பதக்கத்தைக் கைப்பற்றினார்.

<<<<>>>>

சீன ஓபன் பேட்மிட்டன் போட்டியில் இன்று நடைபெற உள்ள மகளிர் பிரிவு காலிறுதிச் சுற்றில் இந்தியாவின் மால்விகா பன்சோட் - ஜப்பானின் அகானே யமாகுச்சி-யை எதிர்கொள்கிறார்.

<<<<>>>>

செஸ் ஒலிம்பியாட் போட்டியின் 8வது சுற்றில் இந்திய அணி ஈரானை வென்றது.

ஹங்கேரியின் புடாபெஸ்ட் நகரில் நடைபெற்ற இப்போட்டியில் இந்தியா மூன்றரை புள்ளிகள் பெற்றது.

ஈரான் பூஜ்ஜியம் புள்ளி 5 புள்ளிகள் பெற்றது.

<<<<>>>>

ஆஸ்திரியாவில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீராம் பாலாஜி - அர்ஜென்டினாவின் **Andreozzi** இணை அரை இறுதிச் சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதிச் சுற்றில் இந்த இணை, 6-1, 6-2 என்ற செட் கணக்கில் இத்தாலியின் **Giorgio Ricca – Virgili** இணையை வென்றது.

**<<<<The End>>>>**